**பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் – நிதி, மாகாணத் திறைசேரி**
**வடமாகாணம்**

**Deputy Chief Secretary's Secretariat –Finance**
**Provincial Treasury – Northern Province**

නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් - මුදල් - පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත

---

**My No**:- NP/09/FRM/2007 **Date**:- 31.07.2007

**மாகாணத் திறைசேரி சுற்றுநிருபம்:- PT/22/2007**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**அரச அலுவலர்களுக்கு வங்கிகள் ஊடாக**
**சொத்துக்கடன் மற்றும் வாகனக்கடன் வழங்குதல்.**

மேற்படி விடயம் சம்பந்தமாக பொதுநிர்வாக சுற்றுநிருப இல – 15/2007ன் மீதும் பாதீட்டு சுற்றுநிருபங்கள் 130(II), 132, 132(II) ஆகியவற்றின் மீதும் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. மேற்படி சுற்றுநிருபங்களில் கூறப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் வழங்கப்படும் கடன்களை பின்வரும் இரண்டு காலவரையறைக்குள் பிரித்து அறவீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1. 15.06.2007ம் திகதிக்கு முன் வழங்கப்பட்ட கடன்கள்.
2. 15.06.2007ம் திகதிக்கு பின் வழங்கப்படும் கடன்கள்.

3. மேற்படி 15.06.2007ம் திகதிக்கு முன் வழங்கப்பட்ட சொத்துக் கடன்களின் நிமித்தம் உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்படும் வட்டி வீதமானது கடன் முடியும் வரை 4மூ மாகவே இருக்கும்.

4. 15.06.2007ம் திகதிக்கு பின் வழங்கப்படும் சொத்துக் கடன்களின் நிமித்தம் உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்படும் வட்டி வீதமானது பின்வருமாறு அமையும்.

- ரூபா 500,000/- வரையான கடனுக்கு - 4%
- ரூபா 500,001/-ல் இருந்து ரூபா 1இ000இ000.:.- வரையான கடனுக்கு - 8%
- ரூபா 1,000,001/-ல் இருந்து ரூபா 3இ000இ000.:.- வரையான கடனுக்கு - 11%

மேற்படி அறவீடுகள் சம்பந்தமாக இதனுடன் இணைக்கப்பட்டுள்ள உதாரணத்தை பார்க்கவும்.

5. மாதாந்த அறவீடுகள் சம்பந்தமான விபரங்களை பாதீட்டு சுற்றுநிருபம் 130(II)ல் உள்ள இணைப்பு(I)ல் வங்கியில் இருந்து பெறுதல் வேண்டும். மேற்கூறப்பட்ட பந்தி 2ல் குறிப்பிட்ட வெவ்வேறு காலப்பகுதிக்கு வெவ்வேறு படிவங்களில் பெறுதல் அவசியம்.

6. <u>வாகனக் கடன்கள்</u>.
வாகனக் கடன்களுக்கான வட்டி அறவீட்டு முறையும் மேலே 2ம் பந்தியில் கூறப்பட்ட இரு காலப்பகுதிகளையும் அடிப்படையாக கொண்டதாகும்.

a) 15.06.2007ற்கு முன் பெற்ற கடன்களுக்கு உத்தியோகத்தரிடம் இருந்து 4% அறவிடுவதோடு அரசாங்க உதவுதொகையாக 7%மும் சேர்த்து வங்கிக்கு 11%, <u>கடன் முடியும் வரை செலுத்த வேண்டும்</u>.

b) 15.06.2007ற்கு பின் பெறும் கடன்களுக்கு உத்தியோகத்தரிடம் இருந்து 11% அறவிடுவதோடு அரசாங்க உதவுதொகையாக 3.5%மும் சேர்த்து வங்கிக்கு 14.5% செலுத்தப்படல் வேண்டும்.

7. மாதாந்த வட்டி அம்மாத ஆரம்பத்தில் இருந்த மீதிக்கே கணிக்கப்படல் வேண்டும்.

8. மேற்கூறப்பட்ட சுற்றுநிருபங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

ஆ.செல்லத்துரை
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி
பிரதம செயலாளருக்காக.

பிரதி:-

1. ஆளுனரின் செயலாளர் - வமா
2. செயலாளர், மாகாண பொது நிர்வாக அமைச்சு – வமா
3. பிரதிப் பிரதம செயலாளர் - கணக்காய்வு – வமா
4. கணக்காய்வாளர் நாயகம்

} தகவலுக்காக

உதாரணம் 1

| அனுமதிக்கப்பட்ட சொத்துக் கடன் தொகை | 15.06.2007ன் முன் பெற்ற கடன் தொகை (4மூ வட்டிக்கு உரித்தானது) | 15.06.2007ன் பின் பெற்ற கடன் தொகை | 15.06.2007ன் பின் கடன் பெற்ற முறை | 15.06.2007ன் பின் பெற்ற கடனுக்கான வட்டி வீதம் | 15.06.2007ன் பின் பெற்ற கடனுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் மானிய வீதம். | * 15.06.2007ன் பின் பெற்ற கடனுக்கான வட்டித் தொகை (முதலாவது மாதம்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவது | அரசாங்க மானியம் |
| 1,350,000/- | 350,000/- | 1,000,000/- | 1) **முதல்** 150,000/-<br>2) **அடுத்த** 500,000/-<br>3) **அடுத்த** 350,000/- | 4%<br>8%<br>11% | 10.5%<br>6.5%<br>3.5% | 500.00<br>3,333.33<br>3,208.33 | 1,312.50<br>2,708.33<br>1,020.83 |
| உதாரணம் 2<br>1,400,000/- | 650,000/- | 750,000/- | 1) **முதல்** 350,000/-<br>2) **அடுத்த** 400,000/- | 8%<br>11% | 6.5%<br>3.5% | 2,333.33<br>3,666.66 | 1,895.83<br>1,166.66 |

* ஒவ்வொரு மாதத்திற்குமான வட்டி அம் மாத தொடக்கத்தில் இருந்த கடனின் தொகைக்கு கணிக்கப்படல் வேண்டும்.